**சரியான விடை+2வணிகவியல் தேர்வு மார்ச்2018**

1.(d) இயக்குனரவையிடம்
2.(a) கூட்டுப் பங்கு நிறுமம்
3.(d) வில்லியம் R பேசட்
4.(c) விரைவாக
5.(c) ஒப்பந்தத்தால்
6.(d) நிறுவனம்
7.(c) முதல்வர் மற்றும் முகவர்
8.(ஆ) தொழில் கூட்டுருவாக்க சான்றிதழ் பெற்றவுடன்
9.(அ) அழைப்பு பணத்தை செலுத்தத் தவறுவது
10(d) பங்குகள்மீது செலுத்தப்பெறாதிருக்கும் மதிப்பளவாகும்
11.(b) ரூ 5000
12.(d)மேற்சொன்னஅனைத்துமாக செயலாற்றுகிறார்
13.(d) கரடி
14.(b) பொது விடுப்புகள்
15.(d) 1956
16.(c) 25
17.(b) ஆதரவின் அடிப்படையில்
18.(d) இந்திய நிறுமச் சட்டம் 1956
19.(a) பொதுக் கழகம்
20.(d) பொதுக் கழகம்

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

21. பொதுக்கழகம்/பொதுக்கூட்டுரு/சட்டமுறைகழகம்
22. வரையறா/ வரையறையில்லாத
23. தனிவணிகம்
24. இணைவினை
25. துணைக்கூட்டாளி
26. 2
27. பொது
28. குவிமுன்னுரிமைப் பங்கு
29. உரிமையாளர்கள்
30. 5
31. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில்
32. கடனீட்டுப்பத்திரம்
33. தகவலறிக்கை
34. வெளியீட்டகங்கள்
35. பட்டியலிடுதல்
36. 21
37. மக்களாட்சி தன்மை
38. கூட்டுறவுச் சங்கம்
39. நாட்டுடைமையாக்கம்
40. தனியார்துறை

**ஏதேனும் 10வினாக்களுக்கு விடையளி10X4=40**

**41.ஒருங்கிணைத்தல்:** விரும்பும் இலக்கினை அடைய நிறுவனத்தின் பல்வேறு நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். ஒரு பண்டகசாலை இலாபம் பெறவேண்டுமெனில் கொள்முதல் துறையும், விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்

**42.வாரிய அமைப்பு:** மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவிடம் உள்ளது. தனிச்சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது.
TWAD, TNEB, TNHB

**43.கூட்டு உருவாக்கம் பெறாத அமைப்புகளின் வகைகள்:** தனியாள்வணிகம், கூட்டாண்மை இந்துக் கூட்டுக் குடும்பம்

**44..கூட்டாண்மை நிறுவனத்தின் உறுப்பினர் எண்ணிக்கை** குறைந்தபட்சம் 2 அதிகபட்சம் வங்கித்தொழில் 10, பிறதொழில் 20.

| 45. கூட்டாண்மைக் கலைப்பு | நிறுவனக் கலைப்பு |
|---|---|
| ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டாளிகள் கூட்டாண்மையோடு தங்களுக்குள்ள உறவை முறித்துக் கொள்வதாகும். | அனைத்து கூட்டாளிகளும் தங்களுக்குள்ள உறவை முறித்து கொள்வதாகும். |
| தொழில் முடிவுக்குக் கொண்டு வரலாம் அல்லது தொடர்ந்து நடத்தலாம். | கட்டாயமாக தொழிலை முடிவுக்கு கொண்டு வந்துவிடும். |

**46. குறுமப் பங்கொப்பம் பெறவில்லையெனில்:** பங்குகளை ஒதுக்கீடு செய்தல் கூடாது. விண்ணப்பத்தொகையைத் திருப்பி அளிக்க வேண்டும்.

**47. வரையறு பொறுப்பு:** கூட்டுப் பங்கு நிறுமத்தில் ஒரு பங்குநர் தனது பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும் மதிப்பளவே பொறுப்பாகிறார்.

**48. சிறப்புப் பொதுக் கூட்டத்தை யார் கூட்டலாம்?** நிறுமச் சட்ட வாரியம் அல்லது இயக்குநரவை அல்லது வேண்டுகோள் விடுத்த பங்குதாரர்கள் சிறப்புப் கூட்டத்தைக் கூட்டலாம்.

**49. சட்டமுறை அறிக்கை:** சட்டமுறை கூட்ட நாளுக்கு 21 நாட்களுக்கு முன்னர் சட்டமுறை அறிக்கையை உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டும். சட்டமுறை அறிக்கையில் காணப்பெறும் செய்திகள் குறித்து பங்குநர்கள் விவாதிக்கலாம்.

**50. செபி:** இந்தியப் பங்கு சந்தையை ஒழுங்குபடுத்துவதற்க்காக ஏற்படுத்தப்பட்ட மேற்பார்வை அமைப்பாகும்.

**51. இரண்டாம் நிலைச்சந்தை** என்பது முதன்மைச் சந்தையில் வெளியிட்ட பத்திரங்களை மறு விற்பனை செய்யும் சந்தையாகும். இரண்டாம் நிலைச் சந்தையின் வளர்ச்சி முதன்மைச்சந்தையைப் பொறுத்தே உள்ளது.

**52. ஒரு நபர் ஒரு வாக்கு:** கூட்டுறவு சங்கத்தின் மேலாண்மை மக்களாட்சி அடிப்படையில் அமைந்திருக்கிறது. உறுப்பினர் மூலதனப் பங்குத் தொகையாக எவ்வளவு செலுத்தியிருந்தாலும் அவருக்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு.

**53.கூட்டுறவு பண்டகச்சாலை :** அதிகமாக கிராமபுறங்களில் காணப்படும். விவசாயப் பொருட்களை சேமித்து வைக்கும் வசதியை உறுப்பினர்களுக்கு அளிக்கிறது. மேலும் முற்றுப் பெற்ற பொருட்களை சந்தையில் நல்ல விலை கிடைக்கும்வரை சேமித்து வைக்க உதவுகிறது.

**54. A.H ஹேன்சன். -** 'உற்பத்தி, விவசாயம், நிதி, வணிகம் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருக்கும் அரசுக்குச்சொந்தமான, தொழில்களை அரசுத் தொழில்கள் எனலாம்' என்கின்றார்.

**S.S கோராவின்** கூற்றுப்படி, மத்திய அல்லது மாநில அரசுகள் தனியாகவோ அல்லது தனியார் துறையுடன் கூட்டாகவோ உற்பத்தி, வணிகம், போன்ற தொழில்களில் ஈடுபடலாம். சுய நிறைவு மேலாண்மையை பெற்றுள்ள அத்தகை தொழில்களை அரசுத் தொழில்கள் எனலாம்.

**55.துறைமுறை அமைப்பு:** (எ.கா) இரயில்போக்குவரத்து, தொலைபேசி, அணுசக்தி, அனைத்திந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி.

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி : 5X8=40**

**56.இந்து கூட்டுக்குடும்பம்:**

1.இந்து கூட்டுக்குடும்ப வணிக அமைப்பில் இந்தியா தலைசிறந்து விளங்குகிறது.

2.இதில் தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் மகள்ஆகியோர் அடங்குவர்.

3.அவர்களது சொத்துக்கள் அனைத்தும் கூட்டுச் சொத்தாகும்.

4.இக் குடும்ப வணிகம் குடும்ப தலைவர் மூலம் நடைபெறுகிறது, அவர் கர்த்தா என அழைக்கப்படுகிறார்.

5.இந்துகூட்டுக்குடும்பத்தில்பெண்களுக்குசேர்ந்துவாழவும், திருமணம்செய்துகொள்ளவும்1956சட்டம் உரிமை வழங்கியிருக்கிறது..

6.இந்து கூட்டுக்குடும்பங்கள் பெரும்பாலும் விவசாயம், கைத்தொழில்கள், சிறுதொழில்கள் போன்ற தொழில்களைச் சார்ந்திருக்கும்.

7.1985ஆண்டு சட்டத்தின்படி ஆண்களை போலவே பெண்களுக்கும் சமஉரிமை உண்டு.

8.அஸ்ஸாம், மேற்குவங்காளத்தில் தாயபாகாசட்டமும், இதர பகுதிகளில் மிட்டக்சராசட்டமும் இந்துகூட்டுக்குடும்பம் பின்பற்றுகிறது

**57. கூட்டாளிகளின் வகைகள்(4):**

**1. உழைக்கும் கூட்டாளி** : தொழிலில் முதலிடுவர். தொழில் நிர்வாகத்தில்பங்கு பெறுவார். மேலாண்மை கூட்டாளி (அல்லது) பொதுக்கூட்டாளி என அழைக்கப்படுவர்.

**2. உழையா கூட்டாளி** : தொழிலில் முதலிடுவர். ஆனால் தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறுவதில்லை. இவர் உறங்கும் கூட்டாளி (அல்லது) முதலிடும் கூட்டாளி என அழைக்கப்படுவர்.

**3. பெயரளவு கூட்டாளி (பாசாங்கு)** : இவர் தொழிலில் முதலிடுவதில்லை, நிர்வாகத்தில் பங்கேற்பதில்லை. கூட்டாண்மையில் தன் பெயரை பயன்படுத்த அனுமதித்து உதவுகிறார். வியாபாரக் கடன்களுக்கு வெளியாரைப் பொறுத்தவரை இவரும் பொறுப்பாகிறார்.

**4. இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி** : இக்கூட்டாளி இலாபத்தை மட்டும் பகிர்ந்து கொள்வார். நட்டத்தைப் பகிர்ந்து கொள்ள மாட்டார். இவர் நிர்வாகத்தில் பங்கு பெற முடியாது.

**58. செயல்முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள்**

1.நிறுமச்சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை **A** யின் விவரங்கள் செயல்முறை விதிகளில் குறிப்பிட வேண்டும்.

2.பங்குகள் ஒதுக்கீடு பங்குகள் மீது அழைப்பு கோரல் தொடர்பானவை

3.பங்குச் சான்றிதல்கள் பங்காணைகள் அனுப்புதல் குறித்து

4.பங்குகளை பங்கிருப்பாக மாற்றுதல்

5.பங்கு முதலை மாற்றி அமைத்தல்

6.இயக்குநர்களின் கடன்வாங்கும் அளவு

7.இயக்குநரவை கூட்டங்கள்

8.நிறுமக் கலைப்பு

**59. பிடிப்பு நிறுமமும் , துணை நிறுமமும்**

ஒரு நிறுமம் வேறொரு நிறுமத்தின்

1.அனைத்து இயக்குநர்களை அல்லது பெரும்பான்மை இயக்குநர்களை நியமிக்கும் அல்லது நீக்கும் நிலையில் இருப்பின், அல்லது

2) வேறொரு நிறுமத்தின் நேர்மைப் பங்கு முதலில் 50 விழுக்காடுக்கு மேல் வைத்திருப்பின் அல்லது

3) வேறொரு நிறுமத்தில் உள்ள வாக்குகளில் 50 விழுக்காட்டுக்கு மேலான வாக்குகளைச் செலுத்தும் நிலையில் இருப்பின், அந்நிறுமம் பிடிப்பு நிறுமமாகும். இவ்வாறு கட்டுப்படுத்தப்படும் வேறொரு நிறுமம் துணை நிறுமம் எனப்படும்.

**60. மேலாளரும் மேலாண்மை இயக்குநரும்**

ஏறக்குறைய ஒரேமாதிரியான பணிகளைத்தான் செய்கின்றனர். இருவருக்குமிடையே உள்ள முக்கிய வேறுபாடு, ஒரு இயக்குநர் மட்டுமே மேலாண்மை இயக்குநராக இருக்க முடியும். ஆனால் மேலாளர் இயக்குநராக இருக்க வேண்டியதில்லை.

ஒரு தனி நபர் மட்டுமே மேலாளராக நியமனம் பெறமுடியும். இயக்குநரவையின் மேற்பார்வைக்கும், கட்டுப்பாட்டுக்கும், வழிகாட்டுதலுக்கும் உட்பட்டு, நிறுமச் செயல்பாடுகள் முழுவதையுமோ, பெரும் பகுதியையோ மேலாண்மை செடிநுயும் பொறுப்பு மேலாளரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

மேலாளர் குறித்து, பிற விதிமுறைகள்.

1) ஒரு நிறுமத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மேலாளர்கள் இருக்க முடியாது.

2) ஒரு நிறுமச் செயல்பாடு முழுவதையுமே மேலாண்மை செடிநுயும் பொறுப்பு மேலாளரிடம் ஒப்படைக்கப் படுமாதலால், மேலாளரின் அதிகாரங்கள் ஒரு மேலாண்மை இயக்குநரின் அதிகாரங்களைவிடப் பரவலானது.

3) மேலாளருக்கு வழங்கக்கூடிய ஊதியம், ஆண்டின் நிகர இலாபத்தில் 5 சதவிகிதத்திற்குக் கூடுதலாக இருக்கக் கூடாது.

4) ஒரே நேரத்தில் 5 ஆண்டுக்கு மேல் ஒருவரை நியமனம் செய்யக்கூடாது.

**61. போல்ட்:** என்பது மும்பை பங்குச் சந்தையில் மார்ச் 1995 முதல் நடைமுறையில் உள்ள ஒரு வணிகச் செயல்பாடாகும்.

**போல்ட்டின்ஆற்றல்கள்:**1.மனிதசெயல்பாட்டு தொகுதிகளில்இயற்கையாகவே அமைந்திருக்கின்ற செயல் திறமின்மையை போக்குகின்றது.

2. பங்கு மாற்றங்களின் வாணிக கொள்திறனை அதிகரிக்கின்றது.

3. பொருத்தி வராத வணிகத்தை தவிர்க்கிறது.

4. அறிவிப்புகள் நடவடிக்கைகளின் நிலையை தாமதப்படுத்துவதில்லை.

5. பங்குகளின் விலைகள், குறியீடுகள் போன்ற தகவல்களை உபயோகிப்பாளருக்கு அளிக்கின்றது.

6. சிறந்த கட்டுப்பாட்டிற்கு பல வகையான வரம்புகளை விதித்திருக்கின்றது.

**62.கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள் தந்துஅதன் சிறப்பியல்புகளை தருக:**

**வரைவிலக்கணம்:** சில்லறை விற்பனை செய்யும் துறைவாரி அமைப்பு நான்கு அடிப்படை துறைகளைக் கொண்டது. மளிகைப்பொருள் சுயசேவைப்பிரிவு மாமிசம் பால் பொருள்கள் மற்றும் வீட்டு உபயோகப்பொருள்கள் விற்பனை செய்யும் இடம் சலுகை அடிப்படையில் துறைகளை குத்தகைக்கு நடத்தம் இடம் என்று M.M.ஜிம்மா்மென் வரையறுக்கிறாா;.

**சிறப்பியல்புகள்**

1. பேரளவுசில்லறைவிற்பனைநிலையம்.
2. பலவகையானபொருட்கள்கிடைக்குமிடம்
3. சுயசேவைவிற்பாண்மைதேவையில்லை
4. பலதுறைகளைகொண்டது.
5. ரொக்கஅடிப்படையில்விற்பனைசெய்யப்படும்
6. அரிதானபொருட்கள்கூடஇங்குவிற்பனைசெய்யப்படும்.

**63. அரசு நிறுமத்தின் இயல்புகள் :-**

**1) கூடட்டுருவாக்கம் :-** அரசு நிறுமம் இந்திய நிறுமச்சட்டத்தின் கீழ் கூட்டுருவாக்கப்பட்டு தோற்றுவிக்கப்படுகிறது. **2) அரசு நிதி** : இதற்கு தெவையான பெரும்பான்மை பங்குமுதல் அதாவது 51% அரசு பெற்றுள்ளது. 3) **பொதுமக்கள் பஙகேற்பு :-** தனியாா் துறையும், பொதுமக்களும் பங்கு முதல் பெற்று இதில் பங்கேற்கிறாா்கள். **4) மேலாண்மை** : இதன் மேலாண்மை இயக்குநரவையிடம் உள்ளது. தகுதி, திறமை, அனுபவம் வாய்ந்தவா்களையே இயக்குநா்களாக அரசு நியமிக்கும். இதில் பல பிரிவினா்களும் இடம் பெறும் வண்ணம் அரசு நியமிக்கின்றது. **5) தன்னாட்சியுரிமை** : அரசு நிறுமங்கள் நிா்வாகம் மற்றும் நிதி குறித்து சுதந்திரமாக முடிவெடுத்து செயல்படும் **6) பணியாளா்கள்** : அதன் பணியாளா்கள் அரசு அலுவலா் அல்ல. இயக்குநா்கள், மற்ற பணியாளா்களை அரசு தோ்ந்தெடுத்து அமா்த்தும். **7) கட்டுப்பாடு** : அந்தந்த துறை சாா்ந்த அமைச்சரின் கட்டுப்பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்டு செயல்படுகிறது. **8) தணிக்கையா்:** இதன் தணிக்கையாளரை அரசே நியமிக்கும். **9) பதில் சொல்லும் கடமை** : இதன் செயல்பாடுகள் குறித்த பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தில் பதில் சொல்லும் கடமை உண்டு.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 4X20=80**

**64.அ) பன்னாட்டு நிறுமம்:** பன்னாட்டு நிறுமம் எனும் சொல் இரண்டு பதங்களைக் கொண்டுள்ளது. பன் என்பது பல (அல்லது) அநேக என்பதை குறிக்கும். நாடுகள் என்பது பல தேசங்களைக் குறிக்கும். எனவே பன்னாட்டு நிறுமங்கள் என்பது பல நாடுகளின்இயங்கி வரும் நிறுமங்கள் எனப்படும். இந்த நிறுமங்களுக்கு தொழிற்சாலைகளும், அலுவலகக் கிளைகளும் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இருக்கும். எல்லாவகையான வியாபார அமைப்பு ஒரு நாட்டு அரசின் எல்லையைத் தாண்டி சென்றால் அது பன்னாட்டு நிறுமம் எனப்படும். இதை உலக அளவில் பலமிக்கவன் (அ) உலக வியாபாரம் (அ) பன்னாட்டு வியாபாரம் என அழைக்கப்படும்.

வரைவிலக்கணம்:-

- ஐக்கிய நாட்டுக் குழுவின் கூற்றுப்படி பன்னாட்டு நிறுமங்கள் என்பது நாட்டில் அது உருவாக்கப்பட்டதோ, அதைவிட கூடுதலாக பல நாடுகளில் அது கூட்டுருவாக்கப்படுவதாகும்.
- நைல் ஜே கோபி அவா்கள் கூற்றுப்படி ஒரு பன்னாட்டு நிறுமம் என்பது ஒரு வியாபாரத்தை தொடங்கி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் மேலாண்மை செய்து வருவதாகும்.

சிறப்பியல்புகள் :

1) இது ஒரே சமயத்தில் பல நாடுகளில் நடத்தப்படும் 2) இது மிகப்பெரிய அளவில் செயல்படும் 3)இது அயல்நாடுகளில் உள்ள கச்சாப்பொருட்கள், பணியாட்கள், சந்தை ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு போக்குவரத்துச் செலவுகளைக் குறைக்க முற்படும்.

பிறசெயதிகள் :

- உலக அளவில் 500 முதல் 700 பன்னாட்டு நிறுமங்கள் இன்று செயல்படுகினறன.
- இதில் சரிபாதி அமெரிக்காவிலும், மீதி பிறநாடுகளிலும் காணப்படுகின்றன.
- அமெரிக்காவில் தலைமையிடமாக கொண்டுள்ள பன்னாட்டு நிறுமங்கள் அயல்நாட்டு முதலீடுகளை நேரடியாகக் கொண்டுள்ளது.
- பின்தங்கிய நாடுகளில் முதலீடுகளும் பணியிடங்களும் பன்னாட்டு நிறுமங்களால் 12 நாடுகளில் ஏற்படுத்தப் பட்டுள்ளன.
- அவைகள் பிரேசில், மெக்ஸிகோ, ஹாங்காங், சிங்கப்பூா், தென்கொரியா மற்றும் பிலிப்பைன்ஸ் போன்றவை
- பன்னாட்டு உழைப்பாளா் சங்க அமைப்பின் கூற்றப்படி அமெரிக்காவில் 60% நிறுமங்கள் வேலைவாய்ப்பை வளரும் நாடுகளில் உருவாக்குகின்றன. ஆசிய நாடுகளில் 30 நிறுமங்களும், ஆப்பிரிக்காவில் 10% நிறுமங்களும் செயல்படுகின்றன.
- அயல்நாட்டு முதலீடுகள் வளரும் நாடுகளுக்குச் சென்று அங்குள்ள பொருளாதார சூழ்நிலை, மலிவான பணியாளா்கள், எண்ணெய் வளங்களையும், இயற்கை வளங்களையும் பயன்படுத்த பன்னாட்டு நிறுமங்கள் உதவுகின்றன.
- எடுத்துக்காட்டுகள்

1) யூனிலீவா் லிமிடெட் - இது ஒரு பிரிட்டிஸ் நிறுமம் இந்தியாவில் இந்துஸ்தான் லீவா் லிமிடெட் என்ற துணை நிறுமம் பெற்றுள்ளது.

2) யூனியன் காா்பைடு - இது ஒரு அமெரிக்க நிறுமம் இந்தியா உட்பட பலநாடுகளில் துணை நிறுமங்களை பெற்றுள்ளது.

3) IBM என்ற இன்டா்நேஷனல் பிசினஸ் மெஷின் .இது அமெரிக்க நிறுமம். பலநாடுகளில் கிளைகள் உள்ளது.

4) பிலிப்ஸ் - டச்சுநிறுமம். இந்தியாவில் பிலிப்ஸ் இந்தியா என்ற துணை நிறுமம் பெற்றுள்ளது.

5) கோகோ கோலா கழகம் - அமெரிக்கா நிறுமம். பல நாடுகளில் உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது.

முடிவுரை :

• வருங்காலத்தில் பன்னாட்டு நிறுமங்களுக்குமிகச் சிறந்த எதிர்காலம் இருக்கிறது.

• மேலும் அரசின் சாதகமான கொள்கைகளும், பொருளாதார சீர்திருத்தங்களினால் இவை பயனடையப்போகின்றன.

• இந்தியாவில் அயல்நாட்டு முதலீடுகள் பெறுவதில் தடையில்லாத் தீர்வின் காரணமாக இந்தியா முன்னேற வகை செய்கிறது.

**64.ஆ) துறைவாரி அமைப்பின் நிறைகள் (5):**

**1. முழுமையான அரசுகக்கட்டுப்பாடு :** அரசின் நேரடிக்கட்டுபாட்டின் கீழ் இவ்வமைப்பு இயங்குகின்றன. சம்பந்தப்பட்ட அமைச்சகத்தின் நிருவாகத்துக்கு உட்பட்டிருந்தால் அரசு இவற்றின் செயல்பாட்டை சரியான வழியில் கட்டுப்படுத்த முடிகிறது.2. **மேலாணமை** : அரசு அலுவலர்கள் இவ்வமைப்பை மேலாண்மை செய்கின்றனர். அவர்கள் உண்மையாகவும் திறம்படவும் உழைப்பார்கள். 3. **அரசுக்கு வருவாய் கிடைத்தல்** :வியாபார நோக்கில் செயல்படும் இந்நிறுவனங்கள் மூலம் கிடைக்கம் வருவாய் அரசைச்சாரும் இவ்வருவாய் சமூகப் பணிகளுக்கும், வளர்ச்சிப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படும். 4. **அரசின் கொள்கைகளை செயல்படுத்துதல்** : இந்நிறுவனங்களில் அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் அரசு செயல்படுத்துகின்றன.

**5. தகுந்த வழிகளில் நிதியை பயன்படுத்துதல்:** இவை கடுமையான கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுவதால், இவற்றிக்கு அளிக்கப்படும் நிதி முறையாக பயன்படுத்தப்படும்.

**6. குறிப்பிட்ட தொழில்களுக்கு ஏற்றது:** பொதுச்சேவை சார்ந்த தொழில்களுக்கு இவை ஏற்றது. இலாப நோக்கோடு இல்லாமல், நியாயமான விலையில் மக்களுக்குத் தேவையான பணிகளை செய்து இவற்றின் குறிக்கோளாகும். உற்பத்தி தொடங்குவதற்கு நீண்ட காலம் பிடிக்கும் தொழில்களுக்கு இவை சிறந்ததாகும்.

**7. பதில் சொல்லும் கடமை:** இவற்றின் செயல்பாடுகள் குறித்து பாராளுமன்றத்திற்கோ, சட்டமன்றத்திற்கோ இது தொடர்புள்ள அமைச்சகம் பதில் சொல்லும் கடமை உண்டு.

**குறைபாடுகள் (5) 1.அரசு தலையீடு** இவை அரசின் கட்டுப்பாட்டில் செயல்படுவதால், அரசின் நெகிழ்வற்ற நடைமுறை, மரபுகள் தவறாது பின்பற்ற வேண்டியது அவசியம் எனவே செயல் சுதந்திரம் அளிக்கப்படுவதில்லை. மேலும் முடிவுகள் எடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. இவ்வமைப்பில் சிகப்பு நாடாவும், அதிகாரவர்க்கமும் பெருமளவில் காணப்படும்.

**2. தகுதி வாயந்த அலுவலர் இன்மை:** இவ்வமைப்பை நிர்வாகம் செய்யும் அரசு அலுவலர்கள் தொழில் நுட்பம் அல்லது வியாபார நோக்கம் இல்லாதவர்கள். எனவே நுகர்வோரின் சுதந்திரத்தன்மையை கருத்தில் கொள்ளாமல் நிர்வாகம் செய்கின்றனர். 3. **மையப்படுத்தப்பட்ட அதிகாரம்** தொழில் கண்ணோட்டத்தோடு செயல்படாமல் அரசு அதன் கொள்கைகளை இத்தொழிலமைப்பு செயல்படுத்துகிறது. இதனால் ஆட்சி மாற்றத்திற்கேற்ப தனது செயல்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

**4. தாமதமும் சிகப்பு நாடா போக்கும்** : நெகிழ்வு தன்மையற்ற, மரபுகளை தவறாது பின்பற்ற வேண்டிய உள்ளதால், இந்நிறுவனங்கள் விரைந்து செயல்படுவதற்குத் தடையாக உள்ளது.

**5. திறமையின்மை:** இந்நிறுவனங்கள் பெரும்பாலும் போட்டியற்ற சூழ்நிலையில் இயங்குவதால் திறமையை அதிகப்படுத்தவோ, பொருளாதார முனைப்போடு செயல்படுவதில்லை. திறமை எதுவும் இதற்கு நிர்ணையக்கப்படுவதில்லை அரசின் ஒரு பகுதியாகக் கருதுவதால், இதன் நட்டத்தில் அதிக கவனத்தை செலுத்தவதில்லை.

**6. அரசியல் மாற்றம்** : அந்தந்த அமைச்சகத்தின் பொறுப்பில் இது செயல்படுவதால், இவற்றிற்கு நிலையான கொள்கைகளை கடைபிடிப்பது அரிதாக உள்ளது. ஆட்சி மாற்றங்கள் இவ்வமைப்பின் கொள்கை மாற்றங்களுக்கு அடிகோலுகின்றன. 7. **வரிச்சுமை:** இவ்வமைப்பில் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்டும் பொருட்டு அரசு பொதுமக்கள் மீது வரியை சுமத்துகிறது

**65.அ) தனிநபர் வணிகத்தின் குணாதிசயங்கள்**

1) **தனிநபர் உரிமையும் கட்டுப்பாடும்** :- தனிநபர் ஒருவரே இதன் உரிமையாளர். எனவே அவரே உரிமையாளராகவும், தலைவராகவும் யாருடைய குறுக்கு இல்லாமல் சுந்திரமாக வியாபாரத்தை நடத்துகிறார்.

2) **மூலதனம்** :தனியாள் வணிகத்தில் அவரே முதலீடு செய்கிறார். இம்முதல் தன் சொந்த சேமிப்பிலிருந்தோ அல்லது நண்பர்கள், உறவினர்கள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்தோ கடனாக பெற்று முதலீடு செய்யலாம்.

3) **வரையறாப் பொறுப்பு:-** இவரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. வியாபார கடன்களுக்கு தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லாவிட்டால், தனது சொந்த சொத்திலிருந்து அக்கடன்களை தீர்க்க வேண்டும்.

4) **இலாப நட்டம்** :- வியாபாரத்தில் கிடைக்கும் இலாபம் முழுவதும் தனிவணிகரையே சேரும். அவர் பிறருடன் பங்கிட்டுக் கொள்ள தேவையில்லை. அதுபோல நட்டம் ஏற்பட்டால் அந்த நட்டம் முழுவதையும்அவரே ஏற்க வேண்டும்.

5) **சட்டத் தனித்துவமின்மை:-** தனியாள் வணிகத்தில் உரிமையாளரையும், தொழிலையும் சட்டம் ஒன்றாகக் கருதுகிறது. உரிமையாளரோ அவரே நிர்வாகம் செய்கிறார். கூட்டுப்பங்கு நிறுமத்தைப் போல் உரிமையும் நிர்வாகமும் பிரிக்கப்படவில்லை.

6) **தனிச்சட்டம் இல்லை:-** கூட்டாண்மை சட்டம் கூட்டாண்மைக்கும், இந்திய நிறுமங்கள் சட்டம் நிறுமத்திற்கும், இந்திய கூட்டுறவுச் சட்டம் கூட்டுறவு சங்கங்களுக்கும் இருப்பதைப் போல தனியாள் வணிகத்திற்கு தனிச்சட்டம் ஏதுவும் இல்லை. 7) **பதிவு** :- தனியாள் வணிகத்தை பதிவு செய்ய வேண்டியதில்லை. சிலவகைத் தொழில்களை மேற்கொள்ள உள்ளாட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சியிடமிருந்து உரிமம் பெற வேண்டும்.

8) **வாழ்வு:-** நிறுமம் பொன்று இதற்கு நீடித்தவாழ்வு கிடையாது. தனியாள் வணிகரின் வாழ்வைப் பாதிக்கும் எதுவும் அவருடைய தொழிலையும்

பாதிக்கும். அவருடைய இறப்பு (அ) தொழில் திறமை இழத்தல் (அ) அவருக்கு வாரிசு இல்லாமை போன்றவை தொழிலை முடிவுக்கு கொண்டு வரும்.

**9) எளிமை** :- அதை தொடங்குவதும், கலைத்தலும் மிகவும் எளிது. இவ்வணிகத்தை கலைக்க சட்ட விதிகளை பின்பற்ற தேவையில்லை.

**10 உள்ளூர் வியாபாரம்** :- இவ்வணிகம் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே நடைபெறும். சிலவகைத் தனிவணிகங்கள் கிளைகளுடன் சில இடங்களில் நடைபெறும்.

**11. சுய வேலைவாய்ப்பு:-** தனிவணிகர் தனது சொந்த உழைப்பையே வியாபராத்தில் பயன்படுத்துகிறார். தேவைப்பட்டால் சில பணியாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார் அல்லது குடும்ப உறுப்பினர்களைத் துணை கொள்வார்.

**12. குறைந்த முதல்** :- இதைத் துவங்க மிகவும் குறைந்த முதலே போதுமானது. கூட்டுப்பங்கு நிறுமத்தை தொடங்க அதிக முதல் தேவை.

**65.ஆ) 1)ஆண்டுப் பொதுக் கூட்டம்** பிற கூட்டங்கள் மட்டுமின்றி, ஒவ்வொரு நிறுமமும், ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். நிறுமம் உருவாக்கப்பட்ட நாளிலிருந்து 18 மாதங்களுக்குள் நிறுமத்தின் முதல் ஆண்டுப் பொதுக்கூட்டத்தைக் கூட்ட வேண்டும். பின்னர் இரு ஆண்டுப் பொதுக்கூட்டங்கட்கிடையே உள்ள கால இடைவெளி 15 மாதங்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். **2)இயக்குநர் அவைக் கூட்டங்கள்** இயக்குநர்கள் கூட்டங்கள் இயக்குநர் அவைக் கூட்டங்கள் அல்லது அவைக் கூட்டங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. நிறுமத்தின் திட்டங்கள், கொள்கைகள் இக்கூட்டங்களில்தான் வகுக்கப்படுகின்றன. **3) சிறப்பு பொதுக் கூட்டம்:** சட்டமுறைக் கூட்டத்தையும், ஆண்டுப் பொதுக் கூட்டத்தையும் தவிர நடைபெறும் வேறு எந்தப் பொதுக்கூட்டமும் சிறப்புப் பொதுக்கூட்டம் அல்லது அசாதாரணப் பொதுக்கூட்டம் என்று அழைக்கப்படுகிறது. ஒரு அவசரமான அல்லது சிறப்பான பொருள் குறித்த தீர்மானத்தை அடுத்த ஆண்டுப் பொதுக்கூட்டம் வரை தள்ளிப்போட இயலா நிலையில், இயக்குநர் அவை தானே முன் வந்தோ அல்லது சில நிபந்தனைகட்கு உட்பட்டு அதன் உறுப்பினர்கள் வேண்டுதலுக்கு இணங்கியோ இக்கூட்டம் கூட்டப்பெறுகிறது.

**4) சட்டமுறைக் கூட்டம்** ஒரு பொது வரையறு நிறுமத்தில் பங்குநர்களின் முதல் கூட்டம் நிறுமங்கள் சட்டப்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதுவே சட்டமுறைக் கூட்டம் என்று அழைக்கப்படுகிறது. பங்குகளால் வரையறுக்கப்பட்ட அல்லது பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட ஒவ்வொரு வரையறு நிறுமமும் தொழில் தொடங்க உரிமை பெற்ற ஆறு மாதங்களுக்குள் ஒரு மாதத்திற்குப் பின்னர் இக்கூட்டத்தைக் கூட்ட வேண்டும். நிறுமத்தின் வாழ்வுக் காலத்தில் ஒரு முறை மட்டுமே நடைபெறும் கூட்டம் இது.

**66.அ) கூட்டாளிகளின் உரிமைகள்** : 1) தொழிலை நடத்தவும், மேலாண்மை செய்யவும் ஒவ்வொரு கூட்டாளிக்கும் உரிமை உண்டு. 2) நிறுவன தொடர்பான பிரச்சனைகளுக்கு தனது கருத்தினை தெரிவிக்க உரிமையுண்டு. 3) முக்கியமுடிவுகள் எடுக்கும் முன்னர் தங்களை கலந்து ஆலோசிக்க வேண்டும் என கேட்கும் உரிமை உண்டு. 4) நிறுவன ஏடுகளையும், கணக்குகளையும் கண்காணித்து நகலெடுக்கும் உரிமை உண்டு.
5) ஒப்புக் கொண்ட விகிதத்தில் இலாபத்தில் பங்கேற்கும் உரிமை உண்டு. ஒப்பந்தம் இல்லை எனில் சமமாக பங்கேற்கும் உரிமை உண்டு. 6) தொழிலுக்கு வழங்கிய கடன், முன்பணத்தில் மீது 6% வட்டி பெற உரிமை உண்டு 7) அன்றாட வியாபாரத்திற்கு தான் செய்த செலவுக்கு ஈட்டுரிமை பெற உரிமை உண்டு. 8) தொழிலுக்காக நிறுவன சொத்துக்களைப் பயன்படுத்த உரிமை உண்டு. 9) தங்களின் ஒப்புதல் இல்லாமல் புதிய கூட்டாளிகளை நிறுவனத்தில் சேர்ப்பதைத் தடுக்கும் உரிமை உண்டு. 10) நிறுனத்திலிருந்து ஓய்வு பெற உரிமை உண்டு.

**கூட்டாளிகளின் கடமைகள்: அ) முழுமையான கடமைகள்** : இவை கூட்டாளிகளின் உடன்பாட்டால் மாற்ற முடியாதவை. 1)கூட்டாளிகள் தங்களுடைய கடமைகளை நாணயமாகவும், கவனக்குறைவின்றியும், அனைத்து கூட்டாளிகளின் நலனுக்காக செய்ய வேண்டும். 2) ஏனைய கூட்டாளிகளிடம் உண்மையாகவும், விசுவாசமாகவும் நடந்து கொள்ள வேண்டும். 3) தனக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகார வரம்புக்குள் செயல்பட வேண்டும். 4) கூட்டாளிகளுக்கிடையே உடன்பாடு இல்லாதபோது நட்டத்தை சமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும். 5) தொழில் நடவடிக்கையை மேற்கொள்ளும் போதுதான் அறிந்து செய்த தவறினால் ஏற்படும் நட்டத்திற்கு ஈட்டுறுதி செய்ய வேண்டும். 6) பிற கூட்டாளிகளின் ஒப்புதல்தனது பங்கினை பிறருக்கு மாற்றித் தர கூடாது 7) நிறுவன கணக்குகளை உண்மையாகவும் சரியாகவும் வைத்திருக்க வேண்டும். 8) கூட்டாண்மை தொழிலுக்கு எதிராக போட்டித் தொழிலை நடத்தக் கூடாது. 9) நிறுவன சொத்துக்களை தொழிலுக்காகவும், நன்மைக்காகவும் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
10) கொள்முதல் மீதான கழிவு அல்லது விறபனை மீதான கழிவு போன்ற இரகசிய இலாபத்தை ஈட்டக் கூடாது.

**ஆ) வரம்புக்குட்பட்ட கடமைகள்** : சட்டம் வழங்கியுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டுகடமைகளை தங்கள் உடன்பாட்டால் கூட்டாளிகள் மாற்றி அமைத்துக் கொள்ள முடியும்.

**66.ஆ) பல்வகை பங்குகள்: 1.குவி முன்னுரிமைப் பங்குகள்** போதிய ஆதாயம் ஈட்டாவிடில், பங்காதாயம் வழங்கப்படாது. எனினும் அந்தாண்டில் பங்காதாயம் பெறும் உரிமை இவ்வகைப் பங்குநர்கட்குக் காலாவதி ஆவதில்லை. அவர்கட்குச் செலுத்தப்பெறாத பங்காதாயம் சேர்ந்து நிலுவையில் இருந்துகொண்டேயிருக்கும்.

**2. குவியா முன்னுரிமைப் பங்குகள்** குறிப்பிட்ட ஒரு ஆண்டில் இலாபம் இல்லாக் காரணத்தால் பங்காதாயம் வழங்கவில்லையாயின், பங்காதாயம் காலாவதியாகிவிடுகிறது. செலுத்தப்பெறாப் பங்காதாயம் சேர்ந்து வருவதில்லை.

**3.எஞ்சியதில் பங்கேற்கும் முன்னுரிமைப் பங்குகள்** இலாபத்தில் குறிப்பிட்ட நிலையான சதவிகிதம் முன்னுரிமைப் பங்குநர்கட்குப் பங்காதாயமாக வழங்கப்பெறும். குறிப்பிட்ட விழுக்காடு பங்காதாயத்தை முன்னுரிமைப் பங்குநர்கட்கு வழங்கிய பின்னர், நேர்மைப் பங்குநர்கட்கு இயக்குநர் அவை பரிந்துரைக்கும் வீதத்தில் பங்காதாயம் வழங்கும். இவ்விகிதம் ஆண்டுக்காண்டு மாறக்கூடியது.

**4. எஞ்சியதில் பங்கேற்கா முன்னுரிமைப் பங்குகள்** இத்தகைய பங்குகட்கு குறிப்பிட்ட நிலையான பங்காதாயம் பெறுவதற்கு முன்னுரிமை உண்டு. அவ்வாறே நிறுமக் கலைப்பின்போதும் புறக்கடன்களை அடைத்தபின்னர் பங்கு முதலைத் திரும்பப் பெறுவதிலும் முன்னுரிமை உண்டு. எஞ்சிய இலாபத்திலோ, கலைப்பின்போது எஞ்சியிருக்கும் சொத்துக்களிலோ மீண்டும் உரிமை கோர முடியாது. இறுதியில் எஞ்சியது முழுவதும் நேர்மைப் பங்குகட்கே வழங்கப்படும்.

**5.மாற்றிக் கொள்ளக்கூடிய முன்னுரிமைப் பங்குகள்** குறிப்பிட்டக் காலக் கெடுவுக்குள் முன்னுரிமைப் பங்குகளை நேர்மைப் பங்குகளாக மாற்றிக்கொள்ளலாம் என்றால், இவை இவ்வாறு அழைக்கப்பெறும். நேர்மைப் பங்குகளாக மாற்றிக்கொள்ளும் உரிமை உடையவை இவை.

**6.மாற்றிக் கொள்ள முடியா முன்னுரிமைப் பங்குகள்** முன்னுரிமைப் பங்குகளை நேர்மைப் பங்குகளாக மாற்றிக்கொள்ள முடியாதெனில், அவை இவ்வாறு அழைக்கப்படுகின்றன. முன்னுரிமைப் பங்குகள் என வெளியிடப்பட்ட பின், நிறுமத்தின் வாழ்நாள் காலத்தில் முன்னுரிமைப் பங்குகளாகவே இருக்கும்.

**7.மீளதகு முன்னுரிமைப்பங்குகள்** நிறுமச் செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்குமாயின், நிறுமம் ஒன்று மீள்தகு முன்னுரிமைப் பங்குகளை வெளியிடலாம். அதாவது இவ்வகைப் பங்குகளைக் குறிப்பிட்டக் காலக்கெடுவுக்குப் பின், அல்லது அப்பங்கு வெளியீட்டு நிபந்தனைகட்கேற்ப தன் விருப்பப்படி அறிவிப்பு கொடுத்து விட்டு, இவ்வகைப் பங்குநர்கட்கு பங்குப்பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடலாம்.

**8. மீட்கமுடியா முன்னுரிமைப் பங்குகள்** மீள்தகு முன்னுரிமைப் பங்குகள் எனக் குறிப்பிட்டு வெளியிடப்படாத எம்முன்னுரிமைப் பங்குகளும் மீட்க முடியா முன்னுரிமைப் பங்குகளாகும். நிறுமம் தன் வாழ்நாளில் இவற்றை மீட்க இயலாது

**நேர்மைப் பங்குகள்** முன்னுரிமைப் பங்குகளல்லாப் பிற பங்குகள் நேர்மைப் பங்குகளே. முன்னர் இவை சாதாரண பங்குகள் என அழைக்கப்பெற்றன.

**67.அ) பங்குமாற்றகத்தின் நன்மைகள்:**

**நிறுமத்திற்கு நன்மைகள்** 1. பங்கு மாற்றகத்தில் கையாளப்படும் பங்குகளைக் கொண்டுள்ள நிறுமத்தின் மதிப்பு மூலதனச் சந்தையில் உயரும். நிறுமம் வலுவானது என்ற எண்ணம் உருவாகும்.

2. ஒரு நிறுமத்தின் பத்திரங்களுக்கான சந்தையை விரிவடையச் செய்கின்றது. அதாவது நிறுமங்களின் பங்குகளுக்குப் பரந்த அளவிலான சந்தை கிடைக்கிறது. 3. பங்கு மாற்றகத்தில், பங்குகள் விற்க மற்றும் வாங்கப்படுவதால், நிறுமத்தின் வருவாய், பங்காதாயம் மற்றும் சொத்து மதிப்புகளோடு ஒப்பிடுகையில் நிறுமத்தின் பங்குகளின் மதிப்பு கூடுகின்றது. இது நிறுமம் வேறொரு நிறுமத்தோடு இணைக்கப்படும்பொழுது சாதகமான பேரத்தைப் பெற உதவி செய்கிறது.

4. பங்கு மாற்றகம் தருகின்ற மறைமுகமான உதவிகளால் புதிய நிறுமங்கள் மூலதனச் சந்தையில் எளிதாகத் தனக்குத் தேவையான முதலீட்டினைப் பெற முடிகிறது. 5.ஊக வணிகர்களின் செயல்பாட்டினால் பட்டியலிடப்பட்ட பத்திரங்களின் விலைகளில் அடிக்கடி ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் குறைகின்றன.

**முதலீட்டாளருக்கு நன்மைகள்.** 1. பங்கு மாற்றகங்கள் முதலீட்டாளர்களின் விருப்பத்தையும் ஆர்வத்தையும் பாதுகாக்கின்றன. முதலீட்டாளர்கள் தமது விருப்பம்போல பத்திரங்களை உடனடியாக வாங்கவும் விற்கவும் ஏற்ற ஆயத்தச் சந்தையாகவும் இடையறாச் சந்தையாகவும் இவை விளங்குகின்றன. தரகர்களால் அவர்கள் ஏமாற்றப்பட மாட்டார்கள். 2. பத்திரங்களுக்கான நிலையான சந்தையையும் முதலீடுகளுக்கான நீர்மைத் தன்மையையும் அளிக்கின்றது. 3. பங்கு மாற்றகத்தில் வாணிகம் செய்யப்படுகின்ற பத்திரங்கள் கடன்களுக்கு நல்ல பிணையங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.4. நிறுமங்களின் பத்திர மதிப்புகளை, விலைப்புள்ளிகளாகப் பங்கு மாற்றகங்கள் தினசரியாகவோ அல்லது பருவகால முறையிலோ வெளியிடுவதால், முதலீட்டாளர்கள் தங்கள் முதலீட்டின் உண்மையான மதிப்பை அறிந்து கொள்ள முடிகிறது. 5. நல்ல நிதி நிலைமையுடைய நிறுமங்களின் பங்குகள்தான் பெரும்பாலும் பங்கு மாற்றகத்தில் வாணிகம் செய்யப்படுகின்றன. அதனால் முதலீட்டாளர்கள் நிதி நிலைமை சீரழிந்த நிறுமங்களில் முதலீடு செய்வதிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர்.

**சமுதாயத்திற்கு ஆற்றும் சேவைகள்** 1. பங்கு மாற்றகங்கள் முதலீட்டாளர்களின் சேமிப்பை நிறுமங்களின் பத்திரங்களில் முதலீடு செய்விப்பதின் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி புரிகின்றன. பெருமளவு மூலதன உருவாக்கத்தையும் ஏற்படுத்துகின்றன.

2. பத்திரங்களின் விற்பனையை ஊக்கப்படுத்தி, (விரிவடையச் செய்து) சிறப்பாக மேலாண்மை செய்யப்படும் நிறுமங்களின் நிலைமையை உயர்த்துகின்றன.3.நன்கு நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள் சுலபமாக நிதி வளங்களைப் பெறுவதற்குப் பங்கு மாற்றகங்கள் உதவுகின்றன.

4. அரசுக்குத் தேவையான நிதியை மக்களிடம் கடனாகப் பெறுவதற்கும், நாட்டிற்கு முக்கியத்துவம் வாய்ந்த வளர்ச்சித் திட்டங்களை அரசு நிறைவேற்றுவதற்கும் உதவுகின்றன.

5. கிடைத்தற்கரிய நிதி வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தப் பங்கு மாற்றகங்கள் உதவுகின்றன. 6. நாட்டின் தொழில் நிலையை அளவிடும் கருவியாகப் பங்கு மாற்றகங்கள் செயல்படுகின்றன. பல்வேறு பத்திரங்களின் விலை ஏற்ற இறக்கங்களின் மூலமாக நாட்டின் பொருளாதாரப் போக்கினை அவைகள் பிரதிபலிக்கின்றன.

**பங்கு மாற்றகங்களின் குறைபாடுகள்**

1. அமைப்பு முறைகளில் சீரான தன்மையும், கட்டுப்பாடும் இல்லாதது முக்கிய குறைபாடாகும்.

2. பங்கு மாற்றகங்களில் உறுப்பினர்களாவதற்குக் கட்டுப்பாடுகள் ஏதுமில்லை. இந்தியாவில் எந்த ஒரு பங்கு மாற்றகமும் உறுப்பினராவதற்குரிய குறைந்தபட்ச கல்வித்தகுதியை வரையறுக்கவில்லை.

3. பல நேரங்களில் பங்கு மாற்றகங்கள் விரும்பத்தகாத ஆரோக்கியமற்ற ஊக வாணிகத்தைக் கட்டுப்படுத்த தவறியிருக்கிறது.

4. பங்கு மாற்றகங்களில் பங்குகள் பட்டியலிடப்படுவதற்குச் சரியான விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை.

5. விளைபொருள் மாற்றகங்களில இருப்பது போன்று பக்க விலக்கு அளி அல்லது மிகை அளவு ஏதுமில்லை.

6. சில நகரங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட பங்கு மாற்றகங்கள் செயல்படுகின்றன.

**67.ஆ)**

| **கூட்டுபங்கு நிறுமம்** | **கூட்டுறவுச்சங்கம்** |
|---|---|
| பேரளவு தொழில் செய்ய பலர் ஒன்றாக இணைந்த அமைப்பு | நலிவடைந்த நபர்கள் ஒன்றாக சேர்ந்த அமைந்திடம் அமைப்பு |
| தனி நிறுமத்தில் 2பேர் பொது நிறுமத்தில் 7பேர் | 25பேர் |
| தனி நிறுமத்தில் 50பேர் பொது நிறுமத்தில் வரையறையில்லை | வரையறையில்லை |
| எப்பகுதியில் வாழ்பவரும் பங்குதாரர் ஆகலாம் | குறிப்பிட்ட பகுதியில் வசிப்பவர் மட்டுமே உறுப்பினர் ஆகமுடியும் |
| இந்திய நிறுமச் சட்டம் 1956ன் படி பதிவு | மாநில அரசாங்க சட்டப்படி பதிவு |
| மேலாண்மை இயக்குநரிடம் | இயக்குநர் குழுவிடம் |
| இலாபம் நோக்குடன் | சேவை புரிவது |
| பங்குநர் எவ்வளவு பங்கு வேண்டுமானாலும் வாங்கலாம் | உறுப்பினர் குறிப்பிட்ட அளவு பங்குகளை மட்டுமே வாங்க முடியும் |
| ஒரு பங்கு ஒரு வாக்கு | ஒரு நபர் ஒரு வாக்கு |
| பணத்திற்கு முன்னுரிம | மனிதனுக்கு முன்னுரிமை |

**குறிப்பு:** மையமதிப்பீட்டுக்கு வருகைதரும் ஆசிரிய பெருமக்கள் அனைவரும் அரசு வழங்கும் விடைகுறிப்பினை ஒப்பிட்டு பார்த்து விடைத்திருத்தம் செய்யுமாறு உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

www.maduraicommerce.com